**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.38/2016

வாதி தரப்பு 1வது சாட்சி பரிதாபேகம் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.பரிதாபேகம் | வயது | : | 64/24 |
| கணவர் பெயர் | : | முகமது கனி | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | புதுக்கோட்டை | தொழில் | : | வீட்டு குடித்தனம் |

நாள்-27.01.2026

வா.சா.1

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) நான் குற்றவியல் நீதிமன்றத்தில் காசோலை வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன்.

2) நான் வருமானவரி செலுத்தியது இல்லை. என்னிடம் பான்கார்டு உள்ளது. அதன் நகல் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

3) எனக்கு புதுக்கோட்டை இந்தியன் வங்கியிலும், புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கியிலும் எனக்கு கணக்குகள் உள்ளது. மேற்படி வங்கி கணக்குகளில் 2014-2015, 2015-2016 நிதியாண்டுகளுக்கான என்னுடைய வரவு, செலவு சம்மந்தமாக கணக்கு நகலை தாக்கல் செய்ய முடியும்.

4) எனக்கு வட்டிக்கு கொடுக்கும் வழக்கம் கிடையாது. அது எங்கள் மார்க்கப்படி ஹரம் என்பதால் வட்டி வாங்கும் பழக்கம் கிடையாது.

5) வா.சா.ஆ.1ல் வட்டி என்ற பகுதியில் அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) வா.சா.ஆ.1ல் கையால் எழுதப்பட்ட அனைத்தும் பிரதிவாதிதான் கையால் எழுதியதாக என்னுடைய முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகத்தில் இல்லை. வட்டி என்ற பகுதியை அடித்ததற்கு பின்பு, ஏற்கனவே பிரிண்ட் செய்யப்பட்ட வாசகங்கள் உண்மையானது என்றால் சரிதான்.

7) நான் பிரதிவாதிக்கு ஐசிஐசிஐ வங்கி மூலமாக பணத்தை கொடுத்தேன். நான் இந்தியன் வங்கியில் நகையை அடகு வைத்து பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன். எத்தனை பவுன் வங்கியில் அடகு வைத்தேன் என்று ஞாபகம் இல்லை.

8) இந்தியன் வங்கியின் கணக்குகளை பார்த்தால் எத்தனை பவுன் அடகு வைத்தேன் என்ற விபரம் தெரிய வரும் என்றால் சரிதான். வங்கி அதிகாரிகளை விசாரித்தால் அந்த விபரம் தெரிய வரும்.

9) என் பெயரிலும் நகை அடகு வைத்தும், மற்றவர்கள் பேரிலும் நகை அடகு வைத்தும், அந்த பணத்தை கொடுத்தேன். மற்றவர்கள் பெயரும் எனக்கு ஞாபகம் இல்லை.

10) நான் இந்தியன் வங்கியில் எவ்வளவு நகை அடகு வைத்தேன் என்ற விபரமும், மற்றவர்கள் பெயரில் எவ்வளவு நகை அடகு வைத்தேன் என்ற விபரமும் எனக்கு தெரியும் என்றாலும், அதை சொன்னால் என்னுடைய வழக்கு பாதகமாகவிடும் என்பதால், உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11) எனது வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் நான் அடகு வைத்து கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றாலும், மற்றவர்கள் பெயரில் நகை அடகு வைத்து கொடுத்ததாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

12) வா.சா.ஆ.1 ஆவணத்தை என் வீட்டில் வைத்து பிரதிவாதி எழுதி கொடுத்தார். எண்.5, சேஷையா சாஸ்திரி ரோடு, ராஜகோபாலபுரம், புதுக்கோட்டை என்ற முகவரியில் உள்ள வீட்டில் வைத்து பிரதிவாதி பிராமிசரி நோட் (வா.சா.ஆ.1) எழுதி கொடுத்தார். அந்த பிராமிசரி நோட் காலையில் எழுதி கொடுத்ததா? மாலையில் எழுதி கொடுத்ததா? என்று ஞாபகத்தில் இல்லை.

13) வா.சா.ஆ.1 ல் சாட்சிகளாக போட்ட நபர்களை நானும், பிரதிவாதியும் சேர்ந்துதான் வரச்சொல்லியிருந்தோம். அந்த சாட்சிகளில் ஒருத்தர் உறவினர், மற்றொருவர் நண்பர், அவர் என் மதவகுப்பை சேர்ந்தவர்.

14) என்னிடமிருந்து காசோலையை பெற்றுக்கொண்ட பிரதிவாதி புரோநோட் எழுதி கொடுப்பதாக சொன்னதால் சாட்சிகளையும், புரோநோட்டை நிரப்பியவரையும் வரச்சொன்னோம். அந்த புரோநோட்டை நிரப்பியவர் எனக்கும், பிரதிவாதிக்கும் வேண்டியவர். அந்த தேதியில் பிரதிவாதி காசோலை தரவில்லை. அந்த காசோலைகளை ஒரு வருடம் கழித்து பிரதிவாதி எனக்கு தந்தார்.

15) நான் நகைகளை அடகு வைத்து, பணம் வாங்கிய பின்பு அந்த நகைகளுக்கு நான் வட்டி கட்டிக்கொண்டு வந்தேன் என்றால் சரிதான். அவ்வாறு வட்டி கட்டி வந்த நிலையில் பிரதிவாதியிடம் அந்த ஒரு ஆண்டு காலத்தில் மேற்படி பணத்தை திரும்ப கேட்டேனா என்றால் நான் பணம் கேட்டதற்குத்தான் அவர் காசோலை தந்தார்.

16) நான் அந்த ஒரு வருடத்தில் எழுத்து மூலுமாகவோ, அல்லது வழக்கறிஞர் அறிவிப்பு மூலமாகவோ பிரதிவாதியிடம் பணம் கேட்கவில்லை.

17) நான் உண்மையிலேயே வட்டி கட்டி பிரதிவாதிக்கு பணத்தை கடனாக கொடுத்திருந்தால், நான் எழுத்துபூர்வமாக பிரதிவாதியிடம் பணம் கேட்டிருப்பேன் என்றாலும், உண்மையிலேயே நான் பிராமிசரி நோட் மூலமாக பணம் கொடுத்திருந்தால் பிரதிவாதியிடம் எழுத்து மூலமாக கேட்டிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

18) வா.சா.ஆ.1 ஆவணத்தை நிரப்பிய சாட்சியையும், சாட்சி கையெழுத்து போட்ட சாட்சிகளையும் நீதிமன்றத்தில் விசாரிக்க தயாராக உள்ளேன்.

19) எனக்கு மூன்று பெண் குழந்தைகள். மூன்று பேருக்கும் திருமணம் ஆகிவிட்டது. கடைசி பெண்ணிற்கு 2014ம் வருடம், டிசம்பர் மாதம் திருமணம் நடந்தது. அதற்கு எவ்வளவு பணம் செலவாகியது என்று ஞாபகத்தில் இல்லை. எங்களது குடும்பம் பெரிய குடும்பம். என் கணவருக்கு அந்த விபரங்கள் தெரியும்.

20) எனது மகள் சித்தாராவிற்கும், பிரதிவாதிக்கும், பிரதிவாதியின் மனைவிக்கும், அவரது மூத்த சகோதரருக்கும் மற்றும் திருவாரூரை சேர்ந்த நந்தகுமார் என்பவருக்கும் இடையே பணப்பரிமாற்றம் மற்றும் சொத்து பரிமாற்றம் நடந்த விபரம் எனக்கு தெரியாது.

21) எனது மகள் சித்தாராவிற்கும், பிரதிவாதிக்கும், பிரதிவாதியின் மனைவிக்கும், அவரது மூத்த சகோதரருக்கும் மற்றும் திருவாரூரை சேர்ந்த நந்தகுமார் என்பவருக்கும் இடையே பணப்பரிமாற்றம் மற்றும் சொத்து பரிமாற்றம் நடந்த விபரம் எனக்கு தெரியும் என்றாலும், தெரியும் என்று சொன்னால் இந்த வழக்கு எனக்கு பாதகமாகும் என்பதால் உண்மைக்கு மாறாக நான் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

22) இந்தியன் வங்கியில் அடிக்கடி என்னுடைய நகைகளை அடகு வைத்து திருப்பும் பழக்கம் உண்டு. 29.01.2015-ல் பிரதிவாதிக்கு நகையை அடகு வைத்து பணம் கொடுப்பதற்கு முன்பு நான் பலமுறை இந்த வங்கியல் நகையை அடகு வைத்து திருப்பியுள்ளேன்.

23) பிரதிவாதியை நானும், எனது கணவரும் ஒரு மகன் மாதிரி நேசித்தது உண்மை. பிரதிவாதி ரியல் எஸ்டேட் மற்றும் வியாபாரம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

24) இந்தியன் வங்கியில் நகை அடகு வைத்து திருப்ப முடியாமல் மூழ்கும் நிலையில், பிரதிவாதியிடமிருந்து பணத்தை பெற்று நான் நகைகளை திருப்பியுள்ளேன் என்றாலும், அதன்பிறகு அவருக்கு அந்த தொகையை திரும்ப கொடுத்துள்ளேன் என்று சொன்னால், அவ்வாறு ஒரு நாளும் நடந்தது இல்லை.

25) நான் 29.01.2015ல் பிரதிவாதிக்கு நான் நகையை அடகு வைத்து பணம் கொடுப்பதற்கு முன்பு, நான் பலமுறை இந்த வங்கியில் நகையை அடகு வைத்து திருப்ப முடியாமல் மூழ்கும் நிலையில் இருந்தபோது, பிரதிவாதியிடமிருந்து பணம் வாங்கி அந்த நகையை மீட்டுவிட்டு, மீண்டும் நகைகளை அடகு வைத்து, பிரதிவாதிக்கு பணத்தை கொடுத்தேன் என்றாலும், அது தான் காசோலை மூலமாக பிரதிவாதிக்கு நான் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

26) இந்த வழக்கில் சொல்லப்படுகின்ற வா.சா.ஆ.1 பிரதிவாதியால் என்னிடம் பெற்ற கடனுக்காக எழுதி கொடுக்கப்படவில்லை என்றாலும், என்னிடம் பிரதிவாதி கடன் எதுவும் வாங்கவில்லை என்றாலும், நான் ஏற்கனவே என்னுடைய நகைகளை மீட்பதற்காக பிரதிவாதியிடம் பெற்ற பணத்தை திரும்ப காசோலை மூலமாக செலுத்தினேன் என்றாலும், என்னுடைய மகள் சித்தாரா மற்றும் பிரதிவாதி, பிரதிவாதியின் மனைவி மற்றும் பிரதிவாதியின் மனைவியின் சகோதரர் மற்றும் திருவாரூரை சேர்ந்த நந்தகுமார் ஆகியோருக்கிடையே நடைபெற்ற சொத்து சம்மந்தமாக ஏற்பட்ட நிதி பரிமாற்றத்திற்காக சித்தாராவிடம் கொடுக்கப்பட்ட பூர்த்தி செய்யப்படாத பிராமிசரி நோட்டை வைத்து, நான் இந்தவழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும், எனது மகள் சித்தாராவிற்கும் எந்த பேச்சு, வார்த்தையும் இல்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.